செய்தித் தாளாகப் பதிவு பெற்றது.

வெள்ளிக்கிழமைதோறும் வெளி வரு

# இந்து சாதனம்

சைவபரிபாலனசபை வெளியீடு.

பிரதி விலை: சதம் 10

ஆரம்பம்: விரோதி ஆவணி மீ 28உ (1889) ஆவணி மீ 28உ, அச்சகம்: சைவப்பிரகாசயந்திரசாலை, 450 காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி: 356

புத்-அ௦] யாழ்ப்பாணம்:- கீலக ஞு வைகாசி மீ உரு உ வெள்ளிக்கிழமை (7-6-1968) [இல

தல வரலாற்றுச் சிறப்பியற் கட்டுரை

## திரு நல்லூர்

( தஞ்சை மாவட்டம் தமிழ் நாடு )

'சிவநெறிச் செம்மல்' திரு. சொ. சம்பந்ததேசிகர்
( இந்து சமயப் பிரசாரகர், திருவிடைமருதூர் தமிழ்நாடு )

**சுவாமி பெயர்:—** ஸ்ரீ கலியாண சுந்தர மூர்த்தி

**அம்மையின் பெயர்:—** ஸ்ரீ அபிராமிஅம்மை

**முக்கிய சிறப்பு:—** அப்பர் சுவாமிகளுக்கு இறைவன் திருவடி சூட்டித் தீக்கை செய்த திருத் தலம்.

**தலத்திற்குச் செல்லும் மார்க்கம்:—** சென்னை தனுஷ்கோடி மெயின் லயனில் (பாதையில்) சுந்தரப் பெருமாள் கோயில் புகைவண்டி நிலையத்தில் இறங்கியும், குடந்தை, தஞ்சை, நெடுஞ்சாலையில், வாழைப்பழக்கடை என்ற இடத்திலும், மங்கலம், கும்பகோணம், வழியில் நல்லூரிலேயே பேருந்து (பிரதான வீதி வழியாக அடையலாம்.

**திருக் கோயில் அமைப்பு விளக்கம்:**

ஊர் குடமுருட்டி ஆற்றின் தென் கரையில் அழகான சோலை நடுவே அமைந்திருக்கிறது. நான்கு பக்கங்களிலும் அழகான திரு வீதி. கோயிலின் எதிரில் பெரிய நல்ல நிலையில் உள்ள அழகிய திருக் குளம் படித்துறை சந்நிதிக்கு எதிரில், தங்குமிடம் அமைந்திருக்கிறது ஐந்து நிலை உள்ள ராஜகோபுரம். உள்ளே சென்றவுடன் அழகான திருச் சுற்று, அக்கினி மூலையில் மடைப்பள்ளி. தெற்குச் சுற்றில் அழகான காளியம்மையின் திருக்கோயில். வடக்குச் சுற்றில் வில்வமரங்கள், புஷ்பச் செடிகள் பலாமரங்கள் உள்ளன. ஈசான திக்கில் யாகசாலை மண்டபம். அண்மையில் சிவலிங்கம் தனிக் கோவில் எதிரே கொடி மரம், நந்தி பலிபீடம் உள்ளன.

கட்டைக் கோபுரம் நுழைவு எதிரில் காசி விநாயகர் சிறு கோயில் திருச்சுற்று உட்புறம் மூன்று பக்கம் மண்டபம் கீழாக அமைந்திருக்கிறது. அப்பனும், அம்மையும் இருக்குமிடம் மலைக் கோயிலாகக் கட்டப் பெற்று இருக்கிறது. கிழக்கு நோக்கி ஏறி வடக்குமுகம் திரும்பினால் அம்மை ஆனந்தமாகத் திருக்கோலம் காட்டுகிருள், மேற்கு முகமாகத் திரும்பியவுடன் பெருமானுடைய சந்நிதானம்.

சிவலிங்கத்திருமேனி சுயம்பு மூர்த்தி ஒரு நாளைக்கு உரிய ஆறுகாலங்களிலும் வேறு வேறு நிறங்காட்டும் வண்ணப் பெருமான் முனி புங்கவர்களை வண்டாக உருக்கொளச் செய்து உட்புக இடந் தந்த துளைத்தழும் புகளைப் பாணத்தில் காட்டி நிற்கின்ருன். மேலும் ஒரே ஆவுடையாரிலே அகத்தியன் பூசித்த பாணமும் உள்ளதாக இருக்கிறது. சிவலிங்கத் திருமேனிக்குப் பின்புறம் உமா மகேசன் இருபக்கங்களிலும் திருமாலும், நான்முகனும் சேவித்து நிற்கிற திருக்கோலங்கள் சுதையால் ஆக்கப்பட்டிருக்கின்றன.

**அழகிய திருமேனிகள்:—** அர்த்த மண்டபத்தில் போகசக்தி, அப்பர் சுவாமிகள் செப்புப் படிமம், பெருமான் திருவடி; வெள்ளியில் செய்யப் பெற்றிருக்கிறது, அம்மன் கோயிலிற்கு கீழ்பால் பள்ளியறை, சண்முகர் திருக் கோயில்கள். கீழிறங்கி நோக்குவோமேயானால் கோட்டங்களில், விநாயகர் முதலிய உருவங்கள் உரிய இடத்தில் அமைக்கப் பெற்றிக்கின்றன. நேரே சோமாஸ் கந்தர் திருக் கோயில்; அதில் எல்லாச செப்புப் படிமங்களும ஒரு சேர அமைக்கப் பெற்றிருக்கிறன. இதில் அபூர்வ திருக் கோலத்தில் ஒரு நடராஜர் திருஉருவம் உளது. கி. பி. 10 ம். நூற்றுண்டுச் சிற்பம். இதன் பிரபை 22 சுடர்களுடன் நீள வட்ட வடிவமாக அமைந்துள்ளது. முயலகன் உட்காந்து இருக்கின்ருன். அவன் தலையில் வலதுகாலை ஊன்றி இடதுகாலை உயர்த்தி மடக்கிச் சதுர தாண்டவ அமைப்பில் ஆடுகிறர், இவருக்குக் கைகள் எட்டு வலக்கை நான்கிலும் கீழிருந்து முறையே, பிரம்பும், அம்பும், அபயமும், உடுக்கையும் அமைந்துள்ளன இடக்கை நான்கிலும் மேலிருந்து முறையே போலஹஸ்தம் தீயகலும் பாம்பும், கேடகமும் அமைந்துள்ளன மகுடம ஜடா மகுடம், பின்தாழ்சடை, அதில் பலவகை அணிகள் உள்ளன, இது ஒரு வகையான தாண்டவமாகும்.

பின் திருச்சுற்றில் விநாயகர் பல முனிவர்கள் தாபித்த லிங்கங்கள், சுப்பிரமணியர் மகாலக்ஷ்மிமுதலியஉள வடக்குத்திருச்சுற்று மண்டபத்தில் அமர்நீதி நாயனர் சமய ஆசாரியர் சிலைவடிவிற் பெரியனவாக இருக்கின்றன

கீழ்ப்பால் திருக்கோயிலில் ஆடவல்லான் அம்மையுடன் தரிசனம் தந்து நிற்கின்ருர்.

**தலச்சிறப்பு:—** (1) குந்திதேவி வழிபட்டுப் பேறு பெற்ற மகவிழாக் கொண்டாடிய தலம்.

(2) அசுரர்களுக்குப் பயந்த முனிவர்களை வண்டுருவில் உடலில் ஏற்ற தலம்,

(3) அகத்தியனுக்குத் திருமணக் கோலங் காட்டி அருள் பாலித்த திருத் தலம்.

(4) அமர் நீதிநாயனர் அவதாரத் தலம். இறைவன் அவர் பொருட்டுக் கோவணத்தைக் கொண்டு குலையத்தைத் தாண்டும் பெருநெறியைக் காட்டி உகந்திருந்தலம்.

(5) அப்பர் சுவாமிகளுக்குத் திருவடி சூட்டிய திருத் தலம்.

நன்மை பெருகு அருண் ணெறியே வந்தணைந்து நல்லூரின்
மன்னு திருத் தொண்டனர் வணங்கி மகிழ்ந்து எழும்பொழுதில்
உன்னுடைய நினைப்பதனை முடிக்கின்ருேம் என்று அவர்தம்
சென்னி மிசைப் பாதமலர் சூட்டினன் சிவபெருமான்.

(தி. புராணம்,

என்று சேக்கிழாரால் சிறப்புடன் எடுத்துரைக்கப் பெறும் திருத்தலம். இவ்வளவு சிறப்பு மிக்க திருத்தலத

தொடர்ச்சி 3-ஆம் பக்கம்

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

இயமன் றூதரு மஞ்சுவ ரின்
சொலால்
நயம்வந் தோதவல் லார்தமை
நண்ணினல்
நியமந் தானினை வார்க்கினி
யானெற்றி
நயன ஞமம் நமச்சி வாயவே.

திருச்சிற்றம்பலம்

**வண்-கிழக்குக் கலட்டி
எச்சாட்டி ஸ்ரீ மாரியம்மன்
கோவில் பரிபாலனசபை**

மேற்படி சபையினது மகா சபைக் கூட்டம் முற்கோபுர முன்றிலில் முகாந்திரம் E. P. இராசையா அவர்கள் தலைமையில் 16-6-68 ஞாயிற்றுக்கிழமை பி. ப. 4.45 மணியளவில் நடைபெறும். காலியான அங்கத்தவர்கள் இடங்களை நிரப்புதல், உத்தியோகத்தர்கள் தெரிவு முதலிய நிகழ்ச்சிகள் முடிந்த பின்பு இவ்வாண்டு உற்சவ ஒழுங்குகள் யோசிக்கப்படுமென மேற்படி சபைக்காரியதரிசி திரு. ப. இ. சரவணமுத்து தெரிவிக்கின்ருர்.

## கவலைகள் எல்லாம் தீருமே

இராகம்: ஷண்முகப்பிரியா. தாளம்: ஆதி.

கந்தா சிவகுமரா எனப்பாடு – உன்
கவலைகள் எல்லாம் தீருமே – அருட் (கந்)

கொந்தார் குழல்வள்ளி – குஞ்சரி காதலை
கும்பிடு வார்க்கருள் – தந்திடும் பாதனை (கந்)

சரவண பவசிவ ஷண்முக குருகுக
சத்துரு சங்கார சித்திர வேலவ
வரதக்கு பாகர மாமயில் வாகன
வாரணத் துவஜனை கார்த்தி கேயனை (கந்)

— அருட்கவி சீ· வி

## சிவம்பூத்த செழும் பொழில்

வ. மு. இரத்தினேசுவரஐயர்

இவ்வுலகம் நிலையியற் பொருளும, இயங்கியற் பொருளும் அமைந்த ஒரு கோளவடிவானது.எல்லாப் பொருள்களும் தோன்றி மறையும். காரியங்கள்யாவும் ஒரு காரணத்தை யுடையன. உலகமும் பல்லுயிரும் ஒன்றிநின்றிலங்குஞ் சிவனெம்மிறை. அப்ப
பொரு ளருளியவை வே
சிவாகமங்கள். அவைக
நன்கு விளக்குவன ப
னன்கு சித்தாந்த சாத்தி
கள். அவ்வுயர் நூன்முக
பிறழாது தியானிக்கற்
லன. தேவார திருவ
காதி பன்னிரு திருமுல
கள். தமிழகம் சைவ
யத்தையே பெரிதும்கை
பிடித்து ஒழுகும் மக்க
யுடையது சிவ திரு
யைப் பெறச் சாதனமா
சரியை. கிரியை யே
ஞானங்கள் ஆகமநெறி
றியன. சைவ சித்தா
சுத்தாத்துவிதப் பே
பெற ஆன்மாக்கள் (
கள்) அந்நூலைக் கற்
கேட்டல் பிறவிப் பிணி
மருந்தாகும். 'கற்ற
கேட்டல் பெரியார்''

நாவலர் பெருமானி
தூய உளப் பண்பாடு
லார்க்கும் இன்பளிப்ப
அன்பு அளித்தது சை
சித்தாந்தக் கற்பகச்
ழில இந்நகர்ச் சைவசி
தாந்த மகாநாட்டில் தோ
றிப் பல சாத்திரமாகிய ம
காய்பழம் எல்லாம் தந்
சாப்பிடச் சாப்பிடத்
திக்கின்றது. ஸ்ரீலஸ்ரீ
புருஷ சிவம் (குரு) அ
கள் அரிய சிவமாகிய ப
தின் சொற்பொருளா
வற்ருத அமிழ்த ரசத்
அன்பர்களின் பேர
வாகிய இதயத்திற் பதி
செவியாகிய வாயில் தெவி
டாதவாறு சொரிந்துவரு
ருர்கள். மக்கள் இவ்வு
ந்த செம்பொருட் டுணிவ
பங்குகொண்டு தேசிகர
களோடு இறை யருள்
றிளைத்துப் பல்லாண்டுவா
வார்களாக. நாம் இன்ப
றிடக் கிடைத்த தருண
இக்காலம். காலத்தை
சிவத்தையும் கடைப்பிடி
போமாக.

சுபம்.

THE HINDU ORGAN

# இந்து சாதனம்

திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்கதண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லாமர னாமமே சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்

கீலக ஞு வைகாசி மீ ௨௫-௨ வெள்ளிக்கிழமை [1968]

## சேக்கிழார் விழா

அகில இலங்கைச் சேக்கிழார் மன்றத்தினது மூன்றாவது விழா சென்ற 1. 2-6-68 ஆகிய இரு தினங்களிலும் சிறப்பாக நடைபெற்றது. 'திருக்கோயில்' ஆசிரியர் சித்தாந்தப் புலவர்மணி திரு ந. ரா முருகவேள் M. A M. O L அவர்கள் சிறப்புச்சொற்பொழிவாளராக அரிய கருத்துக்களை வழங்கினர். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள் சேக்கிழார் நாயனருடைய பெருமையை உலகுக்குச் சிறப்பாக வெளியிட்டனரென அவர் ஒரு சந்தர்ப்பத்திற் குறிப்பிட்டனர். நாவலரவர்கள் தொடக்கத்தில் பரிசோதித்து வெளியிட்ட நூல்களுள் பெரியபுராணமும் ஒன்றாகும். பெரியபுராணத்திலுள்ள ஒவ்வொரு சரித்திரத்திற்கும் தொடக்கத்திலிருந்து காரைக்காலம்மையார் புராணம்வரை வேதாகமசாத்திரக் கருத்துக்களுடன் சைவசித்தாந்தமுறையில் சூசனமும் வெளியிட்டுள்ளனர், நிகண்டுமுதலிய கருவிநூல்களும் மற்றும் இலக்கண இலக்கியங்களும் கற்றவர்களே பத்தியரூபமாகவுள்ள பெரியபுராணத்தைக் கற்றறிய வல்லவர்கள்; மற்றவர்கள் எளிதில் கற்றுணர்தற்கு அது பெரியபுராணத்தைக் கத்தியரூபமாகவும் வெளியிட்டனர் "திருத்தொண்டர் பெரியபுராணம் சிவாகமங்களிலே உணர்த்தப்படும் சரியை கிரியை யோகம் ஞானம் என்னும் நான்கு பாதங்களையும் அநுட்டித்து முத்தி பெற்ற மெய்யடியார்களுடைய அடிமைத் திறத்தை விளக்குவதாகிய சரித்திரரூபமாயிருக்கும்" என நாவலரவர்கள் தமது பெரியபுராண வசன முன்னுரையில் குறிப்பிட்டிருக்கின்றனர்.

இரண்டாம்நாள் தலைமைவகித்த அகில இலங்கைச் சேக்கிழார்மன்றத் தலைவர் திரு ம. ஸ்ரீகாந்தா அவர்கள் கொழும்புத்துறைத் தவமுனிவர் யோகர்சுவாமி அவர்கள் தமக்கு பெரியபுராணத்தினுடைய பெருமையை ஒரு சந்தர்ப்பத்தில் விளக்கினமையைத் தமது தலைமையுரையிற் குறிப்பிட்டனர். "இறைவன் மனம் வாக்குக் காயம் முதலிய கருவி கரணங்களுக்கு அப்பாற்பட்டவர்; அவருடைய இயல்புகளையும் பெருமையையும் அவருடைய அநுக்கிரகத்தைப் பெற்ற அடியார்கள் மூலமே அறிய முடியும். ஆகையால் நமது நாட்டு மக்கள் நற்கதி யடைதற்குப் பெரியபுராணத்தைக் கிரமமாகக் கற்கவேணும்" என யோகர்சுவாமிகள் தமக்குத் தெரிவித்ததாகக் கூறினர்.

இளைஞர்கள் பெரியபுராணத்தைக் கற்பதில் ஊக்கங்கொள்ளுதல் அவசியம் என்பதை யுணர்ந்து இவ்வருடம் அது மன்றம் பெரியபுராணப் பரீட்சையை வடமாகாணத்திலுள்ள பள்ளிக்கூடங்களில் நடத்தியது. பெரியபுராணத்திலுள்ள முதல் 141 செய்யுட்களும் பரீட்சைப் பாடமாக அமைந்தன, முன்னூறுக்கு மேற்பட்ட பிள்ளைகள் பரீட்சையிற் பங்குபற்றினர்கள். திறமையாக விடையெழுதிய பிள்ளைகளுக்கு தங்கப் பதக்கங்களும் புத்தகங்களும் பரிசிலாக வழங்கப்பெற்றன. ஒவ்வொருநாளும் நிகழ்ந்த கருத்தரங்கில் பங்குபற்றிய வித்துவான்கள் சிறந்த ஆராய்ச்சிக் கருத்துக்களை வெளியிட்டனர். பள்ளிக்கூட மாணவ மாணவிகள் மரபுதவறாது தமிழ்மறை ஓதினர்கள். பெரியபுராணத்தை நமது நாட்டு மக்கள் பக்தியுடன் கிரமமாகப் படிப்பதற்கு அகில இலங்கைச் சேக்கிழார் மன்றம் தனது விழாக்கள்மூலம் ஊக்கமளிக்கின்றது. அது மன்றம் வளர்ந்து மேலும் மேலும் இத்தகைய தொண்டுகளைப் புரிய அதற்குத் திருவருள் பாலிக்க வேண்டுமென்று தில்லை நடராஜப்பெருமானை வழுத்துகின்றோம்.

## பல்கலைக் கழக முருகன் கோயில்

பேராதனைப் பல்கலைக்கழக முருகன் கோயில் மகா கும்பாபிஷேகம் 6-6-68 வியாழக்கிழமை மு. ப 10-45 தொடக்கம் 11-20 வரையிலுள்ள சுப நேரத்தில் சிறப்பாக நடைபெற்றது: கலைமகள் ஆசிரியர் ஸ்ரீ கி. வா. ஜகந்நாதன் அவர்களும் பேராசிரியர் திரு. வே. சுப்பிரமணியன் அவர்களும் சிறப்புச் சொற்பொழிவாற்றினர்கள். இறைவன் சேயனுகியும் நணியனுகவும் இருப்பர். அவர் அப்பாலுக்கும் அப்பாலானவர். அத்தகைய பெருமானுக்கு பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்கள் மலையுச்சியில் ஓர் ஆலயம் அமைத்திருக்கின்றனர். அவர் தேவாதிதேவன் யாவருக்கும் மேலானவர் என்ற தத்துவத்தை இந்நாட்டு மக்கள் உணர மலையுச்சியில் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கின்றனர். பேராதனைப்பல்கலைக்கழகத்தில் கல்விபயிலும் இந்துசமயத்தை யனுட்டிக்கும் மாணவர்களுக்கு இதுவரை ஒரு ஆலயமில்லாதிருந்தது. முருகன் ஆலயத் தாபனம் அக்குறையை நீக்கிவிட்டது. இவ்வரிய தொண்டினைப்புரிந்த பல்கலைக்கழக இந்து சமய மாணவர்களதும் பேராசிரியர்களதும் சமயாபிமானத்தையும் ஊக்கத்தினையும் பாராட்டுகின்றோம். மாணவர்கள் கடவுள் பக்தி வைராக்கியம் அடியார் பக்தி முதலிய பண்புள்ளவர்களாகத் திகழவதற்கு அது ஆலயம் உறுதுணை புரியும்.

உ

ஸ்ரீலஸ்ரீ தந்புருஷ தேசிகர் அவர்களுக்கு:

## ஒரு விண்ணப்பம்

குருவே, வணக்கம்.

'யாழ்ப்பாண மண்ணிலே ஒரு நல்ல வித்தை நம்பி வித்தல் செய்யலாம்; என்றாயினும் ஒரு காலத்தில் அவ்வித்து முளைகொண்டு வளர்ந்து விளைவு தரும்" என்று பெரியார் ஒருவர் கூறிய வாக்கொன்றுண்டு.

யாழ்ப்பாண மண்ணின் அடித்தளத்தில் நல்லதோரூற்று இருக்கின்றது; அது கந்தபுராண ஊற்று. அந்த ஊற்றைப் பட்டினங்க யாழ்ப்பாணத்திற் காண முடியாதாயினும் கிராமங்களாகிய அந்தரங்க யாழ்ப்பாணத்திலே அதனைக் கண்ணிறையக் காணலாம். கந்தபுராணம் என்னும் நித்திய கன்னிகையின் புக்ககம் யாழ்ப்பாணம்.

ஒரு காலத்திலே கிறிஸ்தவ சண்டமாருதம் சவிமடியும்பொருட்டு, தன் ஏகபுத்திரனை அந்த நித்திய கன்னிகை நமக்கு அருளினாள். அந்த நித்திய கன்னிகை ஒவ்வொரு தாய் தந்தையின் உதிரத்திலுங் கலந்திருக்கின்றாள். அன்று அவள் அருளிய ஏகபுத்திரர் ஆறுமுகநாவலர் பெருமானே யாவர்.

இன்று ஏகான்ம வாதமாகிய மாயாவாத சண்டமாருதம், வேதாந்தம் என்ற பெருமைவாய்ந்த பெயரைத் தரித்துக்கொண்டு.

முன்னொரு காலத்திலே பௌத்தத்தைப் புறங்கண்டது, இக்காலத்திலே அதனோடு தோழமை பூண்டு, தோளோடு தோளிணைந்து,

பருமரங்களை யெல்லாம் முரிவுசெய்து. வெகு வேகமாக எங்கும் பரவி வருகின்றது.

சினிமா நிலையங்களும், கல்வித் தானங்களும், புதிய சிருட்டிகளான பத்திரிகைகள் புத்தகங்கள் என்பலவகளும், இன்னோரன்ன பிறவும், உலகாயத கரங்களை நீட்டி, மாயாவாத மாருதத்தை வரவேற்கின்றன.

இந்தச் சந்தர்ப்பத்திலே கடவுளுடைய பெருங்கருணை தங்களிடமாக எங்களுக்கு வெளிப்பட்டிருக்கின்றது.

சிவஞான சித்தியார் என்கின்ற தெய்வீக சிந்தாமணியை மாயாவாதம் என்கின்ற பாசி படருகின்ற யாழ்ப்பாணக் குட்டத்திற் போகட்டிருக்கின்றீர்கள். சைவ சித்தாந்தம் என்கின்ற ஞானச் சுடர் விளக்கைத் தூண்டி அதன் பிரகாசத்தை எமக்குச் சற்றே புலஞ்செய்திருக்கின்றீர்கள் கந்தபுராணக் கண்ணினாலே காணக்கூடியதாய அது பிரகாசிக்கின்றது.

'நகரம் என்ற சொல் எழுத்து நிலைமாறி 'நரகம்' ஆயிற்று என்பது ஒரு நவீன ஆராய்ச்சி. நகரங்கள் தங்கள் அருமையை அறியாதிருப்பினும் கிராமங்கள் அறியவல்லன. அவைகள் கந்தபுராண கிராமங்கள் அக்கிராமங்கள் தங்கள் வருகையை எத்தனை முறையும் கரங்களை நீட்டி வரவேற்றபடியே இருக்கும்.

குருவே,

கிராமங்கள் வாயிலாக இந்த யாழ்ப்பாணத்திலே - நாவலர்பெருமான் அவதரித்த மண்ணிலே - சைவசித்தாந்த தனியரசை நாட்டுங்கள்.

'புத்தி' என்னும் அந்தக்கரணம் தங்கள் உபநியாச உபதேசத்தினாலே தெளிவு அடைவதாகுக

'அகங்காரம்' என்னும் அந்தக்கரணம், தங்கள் தீட்சையினாலே பக்குவம் எய்து 'மானம்' என்கின்ற அருமந்த பணியைப் பேணுவதாகுக.

'உபதேசம்' 'தீட்சை' இரண்டும் ஒருங்கு கைகூடுவதற்கு, 'மனம்' என்னும் அந்தக்கரணம், மாசு நீங்கித் தவம்புரிவதாகுக தவத்தைப் பெருக்கும் ஔஷதமாகக் 'கந்தபுராணம்' திகழுக.

திரிகரணங்களையும் ஒருப்படை செய்து தங்களைப் பிரார்த்திப்போமாக சைவ சித்தாந்த கற்பகதருவை யாழ்ப்பாணத்தில் நாட்டி, வருடந்தோறுஞ் சமுகஞ் செய்து, அன்புநீர் பாய்ச்சி, அதனை வளர்த்தருளுதலை வேண்டுகின்றோம்.

வணக்கம்.

சித்தியார் வகுப்புக்காக,

சி கு.

நாவலர் சைவப் பிரகாச வித்தியாசாலை,
யாழ்ப்பாணம்.

## கொட்டடி சைவ விருத்திச் சங்கம் மகாசபைக் கூட்டம்

கொட்டடி சைவவிருத்திச் சங்கத்தின் 60 ஆவது வருடாந்த மகாசபைக்கூட்டம் வைகாசி 9-ந்திகதி (22-5-68) புதன்கிழமை பிற்பகல் 4 மணிக்கு வில்லூன்றி விநாயகர் சபை மடத்தில் திரு. வெ. கோபாலபிள்ளை தலைமையில் நடைபெற்றது.

பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

(1) வில்லூன்றி மயானத்தை இன்னும் திருத்தமான முறையில் அமைத்துக் கொள்வதற்கு சபையில் போதியளவு பணம் இல்லாதிருப்பதால் இச்சங்க அங்கத்தவர்கள் போதியளவு பணம் உதவ வேண்டும் என்று இச்சபை தீர்மானிக்கின்றது

(2) சென்ற 30 ஆண்டுகளுக்கு மேலாக மயானத்தைப் பரிபாலித்துவரும் திரு சோ. இராசரத்தினம் செட்டியார் அவர்களே மேலும் நிர்வாகத்தைத் தொடர்ந்து நடாத்த வேண்டும் என இச்சபை அங்கீகாரம் வழங்குகிறது.

—0—

### மந்துவில் இந்து இளைஞர் மன்றம்

இம்மன்றத்தாரால் பேயா தினங்கள் தோறும் சமய பாடவகுப்பு நடத்தப்பட்டு வருகின்றது. சைவவினா விடை முதலாம் இரண்டாம் பாகங்கள் ஆத்திசூடி கொன்றைவேந்தன் வாக்குண்டாம் நல்வழி நன்னெறி மூதுரை முதலிய நூல்கள் கற்பிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஆவணி 3-ம் தேதியன்று சமய தீட்சை செய்யவும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன, மாணவர்களுக்குச் சமயசாதனைகளும் பயிற்றப்படுகின்றன. கிட்டத்தட்ட 100 மாணவர்கள் அது வகுப்பில் பங்கு பற்றுகின்றார்கள்.

## நேயர் நெஞ்சம்

### சைவ மக்களுக்கு ஓர் வேண்டுகோள்

தற்காலத்தில் ஆலயப்பிரவேசத்திற்காக பெரிதும் பாடுபடும் சில அறிஞர்கள் தெய்வச் சேக்கிழார் சுவாமிகள் பாடிய பெரிய புராணத்தை ஆதாரம் காட்ட முன்வந்துள்ளனர். சேக்கிழார் சுவாமிகள் வாக்குத் தெய்வ வாக்குகள். இந்நூலை ஆயுதமாக வைத்து நியாயங்களைத் தரித்து ஊனக் கண் கொண்டு பார்த்து ஆராய்வது அறிவுடைமையல்ல, ஆலயப்பிரவேசத்திற்குத் தற்காலச் சூழ்நிலையில் நியாயங்கள் இருப்பின் அவற்றைத்தான் பிரசாரம் செய்ய வேண்டும். ஆலயப்பிரவேசத்திற்கு உழைப்போர் சமூகம் சீர்திருத்தத்திற்கு அவசியம் வேண்டிய மது அருந்தாமை புலால் உண்ணாமை முதலியவற்றையே முதலில் பிரசாரம் செய்ய வேண்டும்.

ஓர் அன்பர்

## திரு நல்லூர்

(1-ஆம் பக்கத் தொடர்ச்சி)

தில் எல்லா இனத்தவர்களும் வாழ்கின்றார்கள் மறையவர் வீதி தனித்தனியே உள்ளது இக்கோயில் திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்து ஆளுகைக்கு உட்பட்டது. மாசிப் பெருவிழா பத்து நாட்கள் சிறப்பாகக் கொண்டாடப் பெறுகிறது ஏனைய பஞ்ச பர்வ உற்சவங்களும் நடை பெறுகின்றன

நம்கடன்:— இவ்வளவு உயர்ந்த திருக் கோயிலைச் சிதைவுறாது காக்க வேண்டுமானால் உடன் திருப்பணி செய்ய வேண்டியது மிக மிக அவசியமும், நமது கடமையும் ஆகும்.

ஆகவே இது போன்ற திருக்கோயிலைத் தரிசிப்பது, வழிபடுவது, பணி செய்வது நமது கடமையாகக் கொண்டு நாளும் வழிபட்டு, தொண்டாற்றிச் செய்து உலகிறைச் சமயத்தையும், சைவத்தையும், வளர்ப்போமாக.

வாழ்க வையகம்! வளர்க சைவம்!!

---

உ

சிவமயம்

## திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் குருபூசை

நாள்: வைகாசி மீ உகூ (11-6-68 செவ்வாய்க்கிழமை.
இடம்: சைவபரிபாலன சபை நாவலர் ஆச்சிரம மண்டபம்

நிகழ்ச்சிகள்

முற்பகல் 10 மணி சிவபூஜா மண்டபம் சிவபூசை
கடவுளாராதனை. தமிழ்மறை ஓதல
மகேசுரபூசை

இரவு 7 மணி விரிவுரைக் கூட்டம்
தமிழ்மறை ஓதல்
ஸ்ரீமத் தி. கலியாணசுந்தரக் குருக்கள்
'திருஞானசம்பந்தர் ஞானப்பாலுண்டமை'
சைவப் பெரியார் திரு பொன். அப்புக்குட்டி
'அப்பரும் ஞானசம்பந்தரும்'
சைவப்புலவர் திரு வ கந்தசுவாமி அவர்கள்

சைவாபிமானிகள் யாவரும் சமுகமளிப்பார்களாக.

சைவபரிபாலன சபை, மு. மயில்வாகனம்
யாழ்ப்பாணம், 7-6-68. சமயப்பிரசார அமைச்சர்.

---

## Commission Sale
## கோட்டுக் கொம்மிஷன்

## விற்பனவு அறிவித்தல்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டில்
கெருடாவில் முத்துசின்னையா மகன் சிவபாக்கியம்
வழக்காளி

இல 9137 எதிராக

கெருடாவில் பொன்னையா அளகேந்திரம் தன்வகைக் காகவும் தனது மனைவி காலஞ் சென்ற சிவக்கொழுந்துவின் ஆதனத்துக்குப் பிரதி காரிபஸ்தர் என்ற வகையிலும் —எதிரி

மேற் குறித்த இலக்க வழக்கின் தீர்ந்த தீர்வைப் படியும் குறித்த கோட்டால் எனக்குக் கிடைத்த கொம்ஷன் அதிகாரப்படியும் இதன் கீழ் விபரிக்கப்படுமாதனம் 1968-ம ஆ ஆவணி மீ 14-ந் புதன் கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் குறித்த காணியிடமாக விருந்து என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

ஆதனடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப் பகுதி கடுப்பிட்டிக் கோவிற்பற்று கடுப்பிட்டி யிறை இம்புரி யொல்லை வீடு ½ டி. நி பர 7½ இதற்கு யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் 2445/P-ம இலக்கப் பிறிவிடன் வழக்கில் அணைக்கட்டப்பட்டதும் களைந்தா மேஸ்தர் மா. வேலுப்பிள்ளையால் 982-ம இலக்கத்தில் விஸ்தரிக்கப் பட்டதுமான படத்தின் படி நி பர 9 குளி 9 இதில் குறித்த படத்தில் 4-ம் நம்பர் துண்டுக்கு நில பர 4 குழி 13 1/8 இதில் மேற்கு புறமாக நிந்தமான நி பர 3 எல்லை கிழக்கு வேலுப் பிள்ளை தம்பியப்பா வுடைய வாதனம் வடக்கு செல்லப்பா இராசரத்தினத்துக்கும் மறு பேருக்கும் முடைய வாதனமும் வேறு ஆதனமும் மேற்கும் தெற்கும் ஒழுங்கை இவ்வெல்லைக் குட்பட்டவைகள் முழுவதும்

| | | |
|---|---|---|
| தீரட்சித்தொகை | ரூபா | 4322-90 |
| இதில் முதல் ரூபா 2500/- 19-5-65 தொடக்கம் 21-11-66 வரை 10 வித வட்டி | ரூபா | 125-00 |
| | | 4447-90 |
| 4447-90 க்கு 21-11-66 தொடக்கம் 8-4-68 வரை 5 வித வட்டி | ரூபா | 305-76 |
| | | 4753-66 |
| செலவு | ரூபா | 416-94½ |
| | | 5170-60½ |
| செலவில் கொடுபட்ட தொகை | ரூபா | 125-00 |
| மிகுதி | ரூபா | 5045-60½ |

இ. சு. இராமநாதன்,
R, S. Ramanathan
கொமிசனரும், விலைமதிப்பாளரும
ஏல விற்பனையாளரும்.
Commissioner of Sales & Valuer

"உமாபதி"
தும்பளை,
பருத்தித்துறை, 28-5-68
எம். 60, 31—5—)

---

## இந்துசாதனம்

திருத்திய வருடசந்தாவிகிதம்

| உள்நாடு | |
|---|---|
| ஆங்கிலம் | 9-00 |
| தமிழ் | 9-00 |
| ஆங்கிலம் - தமிழ் | 12-00 |
| **வெளிநாடு** | |
| ஆங்கிலம் | 10-50 |
| தமிழ் | 10-50 |
| ஆங்கிலம் - தமிழ் | 15-50 |

---

### கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

வழக்கு இலக்கம் M. B 5388

கலாநகர் மேற்கு
1 சுப்பிரமணியம் காசிநாதனுடைய மனைவி
2 இராசம்மாவும்
வழக்காளிகள்

எதிராக

காங்கேசன் துறை, 50, சந்தை ஒழுங்கை வீதி
1. வைரமுத்து தம்பி சபாரத்தினம் மனைவி
2 இராசம்மாவும்
எதிராளிகள்

M. B. 5388-ம இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த உத்தரவின்படி கீழ்க்காணும் ஆதனங்கள், 1968-ம ஞூ யூலை (ஆடி) மீ 11உ (11-7-68) வியாழக்கிழமை 1-ம ஆதனம் முற்பகல் 10 மணிக்கும், 2-ம ஆதனம் பிற்பகல் 3 மணிக்கும் தொடக்கமாக அவ்வவ் ஆதனத்தில் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபா 7675/- மேலும் 5000/- ரூபாவுக்கு 6-2-63 தொடக்கம் 18-10-66 வரைக்கும் மாதமொன்றுக்கு 50/- வீத வட்டியும் அதன்பின் முழுத் தொகைக்கும் தீர்க்கும் வரைக்கும் வருடமொன்றுக்கு 5% வட்டியும், இதில் ரூபா 2600/- குறைய; கோட்டுச்செலவு ரூபா 547-15 சதமும் இதில் ரூபா 150 கட்டப்பட்டிருக்கிறது. கொமிசனுக்கு முத்திரைச் செலவு ரூபா 12/-ம்

ஆதன விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணைக் கோயிற்பற்று வண்ணார்பண்ணை வடக்கு கிழக்கிறை "புன்னை தறையும் நாச்சிப்பன்வளவும் பாலையடி றன் காடு" நிலப்பரப்பு 5¼; இதிலுள்ள பனைகளும் மெய்ப்பயிர் வான்பயிர்களும், இதற்கு எல்லை கிழக்கு சுப்பையா மனைவி சின்னத்தங்கத்தினுதனம், வடக்கு ஒழுங்கை, மேற்கு ரோட், தெற்கு பொன்பலம் மனைவி தையல்முத்துவுக்கும், அவவின சகோதரிக்குமுரிய ஆதனம். பதிவு யாழ்ப்பாணம் D 169/298

2 வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி ... லிப்பளை கோயிற்பற்று பளை இறை நிலப்பரப்பு 5 குழிகள் 6 12/13 கொண்டதும், இதுடன் A-யும் B-யும் என அடையாளமிடப்பட்ட கல்வீடும் கிணறும், கிணற்றில் அமைவாசிப்பங்கும் ... சேர்ந்த லொட் 2 இதற்கு எல்லை கிழக்கு அப்புக்குட்டி இராசரெத்தினுதனமும், P. நடராசா மனைவி நல்லம்மாவினுதனமும் ரோட்டும், வடக்கு P நடராசா மனைவி நல்லம்மாவினுதனம் மேற்கு குலசேகரம் மனைவி கமலாம்பிகைக்கும் பங்காளர்களுக்குமுரிய ஆதனம், தெற்கு அப்புக்குட்டி இராசரெத்தினத்தினுதனம் யாழ்ப்பாணம் பதிவு H 316/151

வி. செ. குட்டிப்பிள்ளை
கோட் கொமிசனர்
1.6.68

"இராச கிரி"
643, காங்கேசன் துறை வீதி
யாழ்ப்பாணம்
(M.67 7-6-68)

---

### கோட்டு விற்பனவு விளம்பரம்

வெற்றிவேலு சுவாமிநாதன் மைமெண தங்கரத்தினம் அச்செழு நீர்வேலி
வழ. இல: M. B 8684
வழக்காளி

எதிராக

செல்லப்பா இராசையா சென்றத் துரை டபேஸ்டர் ... ஊர் வீதி வண்ணார்பண்ணை யாழ்ப்பாணம் (சந்திரோ கமமம் வடலியா)
எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் MB 8684-ம இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் 1 துண்டுக் காணியை 1968-ம் ஞூ ஆடி மீ 27 உ சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:— முதல் வட்டி ரூபாய் 2550-ம 14-12 66 தொடக்கம் 10-5 67 வரைக்கும் ரூபாய் 2000/-க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 292/65

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி மல்லாகம் கோயிற்பற்று ... இறை "சனவோடை" நில. பர. 4 குளி 15¾ செய்பயிர் வான்பயிர்களும் கிழக்கெல்லையில் இருக்கும் கிணற்றில் பங்கும் மற்றுமதற்குச் சேர்ந்தவைகளும் எல்லை கிழக்கு ஒழுங்கை, வடக்கு கதிரேசு சின்னையா மேற்கு வயித்திலிங்கம் பெண் ஞானம்மாவும் பங்காளரும் தெற்கு இராசரத்தினம் பெண் இராசம்மா. பதிவு இல. H 354/221.

அ. போ எதிர்மணசிங்கி
கொமிசனரும் விலைமதிப்பாளரும்
14 டேவிட் வீதி, யாழ்ப்பாணம்

52 5-68
(M.65 7-6-68)

---

### பிழை திருத்தம்

31-5-68 ல் பிரசுரமான இந்துசாதன இதழில் வெளிவந்த தலையங்கத்தைத 'தானுவான புராண நூல்' எனத் திருத்திக் கொள்க.

---

### கோட்டு விற்பனவு விளம்பரம்

- ○ -

அக்லப்பிட்டி அலேசு தாவீது
வழக்காளி

வழக்கு இல. M. B. 6812

எதிராக

அல்லைப்பிட்டி சரவணமுத்து செல்லத்துரை
எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 6812-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1968 ம் ஆண்டு ஆடி மாதம் 8-ம் திகதி (8-7-68) திங்கட்கிழமை காலை 10 30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:— ரூபா 25?/-ம் 10-7-64 தொடக்கம் 14 2-66 வரைக்கும் ரூபா 1500/-க்கு 12 வீத வட்டியும், அதன் பின் முழுத் தீர்வைத் தொகைக்கும் பணம் மற்றுக இறுக்கும் வரைக்கும் 5வீத வட்டியும். இவற்றில் ரூபா. 680/- கட்டப்பட்டுள்ளது,

காணி விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாண டிஸ்திறிக் தீவுப்பகுதி, அல்லைப்பிட்டி கோயிற்பற்று, அல்லைப்பிட்டி இறை "சுப்பா வளவு" (Suppar Valavu) நிலப் பரப்பு 25, ஆனால் 1944-ம் ஆண்டு ஆடி மாதம் 9-ந் திகதி உத்தரவு பெற்ற உலாந்தா P. இராமநாதனால் தயாரிக்கப்பட்ட 648-ம் இலக்க படத்தின் படி நிலப் பரப்பு 16-ம குழி 0¾-ம் வீடும் உளம், மூது பனைகளும், கிணறும், எல்லை கிழக்கு கந்தவனம் சங்கரப் பிள்ளைக்கும் ... யோருக்கு முரிய ஆதனம் வடக்கு முருகப்பர் கந்தவனத்துக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம் மேற்கு வள்ளியம்மையின் உரிமையாளருக்கும் வயித்திலிங்கம் செல்லத்துரைக்குமுரிய ஆதனங்கள் தெற்கு சரவணமுத்து பெண் சின்னத் தங்காளின் ஆதனம் இதடங்கலும C 315/51-ல் பதியப் பட்டது.

செ. பாண்டித்துரை
கொம்மிஷனர், விலைமதிப்பாளர்
உத்தரவுபெற்ற ஏலதாரர்
மல்லாகம், 27-5-68

---

### அதை இப்படி வாசிக்கவும்

சென்ற 31-5-68ல் வெளிவந்த 'இந்துசாதன'த்தில் M. B. 8699-ம் இலக்க வழக்கில் தீர்வை தொகையில் காணப்பட்டவைகளுடன் கோட்டுச் செலவு ரூபா 456 சதம் 30ம் எனக் கூட்டி வாசிக்குப்படி தயவாய்க் கேட்டுக்கொள்ளுகின்றோம், இதில் ரூபா 200/- குறைக்கப்படும்.

---

யாழ்ப்பாணம்

## ஐக்கிய இலாப நிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது

100 ரூபா விகிதமான 5000 பங்குகள்
பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

சேமிப்புப் பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒருவிகித வட்டியுடன் சேமிப்புப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 12 மாசம், 24 மாசம் 36 மாசம் என்னும் காலங்களை வரையறுத்து ஏற்படும்வட்டியும் முறையே 7 விகிதமும் 8 விகிதமும் 9 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை எங்கள் காரியாலய மூலமாக அறிந்துகொள்ளலாம்.

— மனேஜர்.

# பிரசித்த ஏலவிற்பனவு விளம்பரம்

## வீடு கட்டுப் திட்டமுடையவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்

காணி இருக்குமிடம்—
யாழ்ப்பாணம் மானிப்பாய்வீதி - கூளாவடி ஒழுங்கை.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

இல. T. R. 43

1917-ம் ஆண்டில் 87-ம் அத்தியாயம் 9-ம் இலக்க தரும சட்டத்தில் 112-ம் பிரிவின் கீழ் அதிகார கட்டளைக்கான விண்ணப்பத்தின்


சார்பாய்.

1. துரைசாமி தியாகராசா, இல 40, உவார்ட் பிளேஸ், கொழும்பு.
2. செகராச சிங்கம் நமசிவாயம். கோட்டன் பிளேஸ் கொழும்பு. தற்பொழுது காளுதேசத்திலுள்ள அக்ரு.
3. எம். சண்முகநாதன், பேராதனைப் பல்கலைக் கழகம்.

ஆனைக்கோட்டை மடதருமம் என அழைக்கப்பட்டு வழங்கிவரும் தருமத்துக்கு தருமகர்த்தாக்களாக வழங்குபவர். -விண்ணப்பகாரர்கள

யாழ்ப்பாணம் டிஸ்திறிற் கோட்டில் T. R. 43 ஆம் இலக்க வழக்கில் கோட்டால் எனக்கு அனுப்பிய கொம்மிஷனின் பிரகாரம் பின்காணும் படத்தில் காட்டப்பட்ட ஆனைக்கோட்டை மட தர்மத்துக்குரிய ஆதனங்களை 21 துண்டுகளாகப் பிரித்துப் பின்காணும்விதம் முதல் 10 துண்டுகளை 1968 ஆம் ஆண்டு ஆடி மாதம் 3-ம் திகதி 3-7-68 புதன்கிழமை காலை 9 மணி தொடக்கமும், மீதி 11 துண்டுகளையும் மறு நாள் 4-ம் திகதி (4-7-68) வியாழக்கிழமை காலை 9 மணி தொடக்கமும் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

காணிகளின் விபரம்




1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்கு மானிப்பாய்க் கோயிற்பற்று ஆனைக்கோட்டை இறை 'சுடலைப்பிட்டி' யும் மறு பிரிவுகளும் தத்துவப்பெற்ற உலாந்தா S. முத்துக்குமாரசாமியால் 21-11-65 ல் அளந்து வரைந்த 2745 ஆம் இலக்கப் படத்தின்படி முதலாம் துண்டு பர. கில லாச்சம் 2 குழி 10.5 எல்லை கிழக்கு ஒழுங்கைக்காக விடப்பட்ட நிலம். வடக்கு ஒழுங்கை மேற்கு 2-ம் துண்டு, தெற்கு மேற்படி படத்தில் 7-ம் துண்டு.

2. ஷை இறை ஷை காணி குறித்த படத்தில் 2 ம் துண்டு பரப்பு கில லாச்சம் 2 குழி 7.2 எல்லை கிழக்கு முதலாம் துண்டு வடக்கு ஒழுங்கை. மேற்கு ஒழுங்கைக்காக விடப்பட்ட நிலம். தெற்கு 6-ம் துண்டும் தெற்கெல்லையிலிருக்கும் கிணற்றில் பங்கும்.

3. ஷை இறை ஷை காணி குறித்த படத்தில் 4-ம் துண்டு பரப்பு 3 குழி 4 எல்லை கிழக்கு படத்தில் 3-ம் துண்டெனக் காட்டப்பட்ட ஒழுங்கைக்கு விடப்பட்ட நிலம், வடக்கு M. சுப்பிரமணியத்தின் ஆதனம். மேற்கு கந்தையா கைம்பெண் செல்லம்மாவினதும் மறுபெயர்களினதும் ஆதனம், தெற்கு 5-ம் துண்டு.

4. ஷை இறை ஷை காணி மேற்படி படத்தில் 5ம் துண்டு பரப்பு 3 குழி 10.7 எல்லை கிழக்கு ஒழுங்கைக்காக விடப்பட்ட நிலம். வடக்கு 4 ம் துண்டு மேற்கு கந்தையா கைம்பெண் செல்லம்மாவின் ஆதனம், தெற்கு 9 ம் துண்டும் ஒழுங்கைக்காகவிடப்பட்டநிலம்.

5. கோட்டுக் கட்டளைப்படி 5-ம் துண்டு விற்பனவி விருந்து நிலக்கப்பட்டது.

6. ஷை இறை ஷை காணி மேற்படி படத்தில் 8 ம் துண்டு பரப்பு கில லாச்சம் 2 குழி 13 எல்லை கிழக்கும் வடக்கும் ஒழுங்கைக்காக விடப்பட்ட நிலம். மேற்கு 9.ம் துண்டு, தெற்கு 12-ம் துண்டு

7. ஷை இறை மேற்படி காணி மேற்படி படத்தில் 9 ம் துண்டு பரப்பு கில வாச்சம் 2 குழி 13 எல்லை கிழக்கு 8.ம் துண்டும் ஒழுங்கைக்காக விடப்பட்ட நிலமும், வடக்கு 5 ம் துண்டு. மேற்கு கந்தையா கைம்பெண் செல்லம்மாவின் ஆதனம், தெற்கு 10 ம், 12 ம் துண்டுகள்,

8. ஷை இறை ஷை காணி மேற்படி படத்தில் 10 ம் துண்டு பரம்பு 2. குழி 7.7 எல்லை கிழக்கு 12-ம் துண்டு வடக்கு 9 ம் துண்டும் கந்தையா கைம்பெண் செல்லம்மாவின் ஆதனம் மேற்கு ஒழுங்கை. தெற்கு 11 ம் துண்டு.

9. ஷை இறை மேற்படி காணி மேற்படி படத்தில் 11 ம் துண்டு பரப்பு 2 குழி 7.6 எல்லை கிழக்கு 13 ம் துண்டு வடக்கு 10 ம் துண்டு. மேற்கு ஒழுங்கை, தெற்கு 16 ம் துண்டு.

10. ஷை இறை மேற்படி காணி மேற்படி படதநில் 12 ம் துண்டு. பரப்பு 2 குழி 9.7 எல்லை கிழக்கு ஒழுங்கைக்கு விடப்பட்ட நிலம் வடக்கு 8-ம் 9-ம் துண்டுகள் மேற்கு 10 ம் துண்டு தெற்கு 13 ம் துண்டு.

11. ஷை இறை மேற்படி காணி மேற்படி படத்தில் 13 ம் துண்டு. பரப்பு 2 குழி 9.1 எல்லை கிழக்கு ஒழுங்கைக்கு விடப்பட்ட நிலம். வடக்கு 12ம் துண்டு மேற்கு 11ம் துண்டு தெற்கு 14ம் துண்டு.

12. ஷை இறை மேற்படி காணி மேற்படி படதநில் 14 ம் துண்டு பரப்பு 2 குழி 8 எல்லை கிழக்கு ஒழுங்கைக்கு விடப்பட்ட நிலம் வடக்கு 13 ம் துண்டு. மேற்கு 16 ம் துண்டு, தெற்கு 15 துண்டு

13. ஷை இறை மேற்படி காணி மேற்படி படத்நல் 15 ம் துண்டு பரப்பு 2 குழி 8 எல்லை கிழக்கு ஒழுங்கைக்கு விடப்பட்ட நிலம் வடக்கு 14 ம் துண்டு மேற்கு 17 ம் துண்டு தெற்கு 20 ம் துண்டு.

14 ஷை இறை மேற்படி காணி மேற்படி படத்தில் 16 ம் துண்டு பரப்பு 2 குழி 7.3 எல்லை கிழக்கு 14 ம் துண்டு வடக்கு 11 ம் துண்டு மேற்கு ஒழுங்கை. தெற்கு 7-ம் துண்டு.

15. ஷை இறை ஷை காணி மேற்படி படதநில் 17 ம் துண்டு பரப்பு 2 குழி 7 2 எல்லை கிழக்கு 15 ம் துண்டு. வடக்கு 16 ம் துண்டு. மேற்கு ஒழுங்கை. தெற்கு 18 ம் துண்டு.

16 ஷை இறை மேற்படி காணி மேற்படி படத்தில் 18 ம் துண்டு பரப்பு 2 குழி 1.5 எல்லை கிழக்கு 20 ம் துண்டு வடக்கு 17 ம் துண்டு மேற்கு ஒழுங்கை. தெற்கு 19 ம் துண்டு,

17 ஷை இறை மேற்படி காணி மேற்படி படத்தில் 19 ம் துண்டு பரப்பு 2 குழி 1,5 எல்லை கிழக்கு 20 ம் துண்டு. வடக்கு 18 ம் துண்டு மேற்கு ஒழுங்கை தெற்கு 23 24 ம் துண்டுகள்

18. ஷை இறை மேற்படி காணி மேற்படி படதநில் 20 ம் துண்டு பரப்பு 3 குழி 13 எல்லைகிழக்கு ஒழுங்கைக்கு விடப்பட்ட நிலம், வடக்கு 15 ம் துண்டு. மேற்கு 18, 19 ஆம் துண்டுகள், தெற்கு 21, 22 ஆம் துண்டுகள்.

19. ஷை இறை மேற்படி காணி மேற்படி படத்தில் 21 ம் துண்டு பரப்பு 2 குழி 1.5 எல்லை கிழக்கும் தெற்கும் ஒழுங்கை வடக்கு 20 ம் துண்டு, மேற்கு 22 ம் துண்டு

20. ஷை இறை மேற்படி காணி மேற்படி படத்தில் 22 ம் துண்டு பரப்பு 2 குழி 1 5 எல்லை கிழக்கு 21 ம் துண்டு வடக்கு 20 ம் துண்டு, மேற்கு 23 ம் துண்டு, தெற்கு ஒழுங்கை

21. ஷை இறை மேற்படி காணி மேற்படி படத்தில் 23 ம் துண்டு பரப்பு 2 எல்லை கிழக்கு 22 ம் துண்டு. வடக்கு 19 ம் துண்டு. மேற்கு 24 ம் துண்டு தெற்கு ஒழுங்கை,

22, ஷை இறை ஷை காணி மேற்படி படத்தில் 24 துண்டு பரப்பு 2 எல்லை கிழக்கு 23 ம் துண்டு. வடக்கு 19 ம் துண்டு. மேற்கும் தெற்கும் ஒழுங்கை.

"முருகன் இல்லம்" — க. செல்லத்துரை,
இணுவில், 4-5-68. — கொம்மிஷனரும் ஏலக்காரனும்
M 70, 7-6-68

# கோட்டு விற்பனவு விளம்பரம்

வண்ணார்பண்ணை மேற்கு, காங்கேசன்துறை வீதி
பொன்னையா மயில்வாகனம் — வழக்காளி
வழ. இல M B 6250 எதிராக
வேலணை மேற்கு சின்னத்தம்பு இராசசேகரமும்
பெண் செல்வமலரும் —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 6250-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் 3 துண்டுக் காணிகளை 1968-ம் ஞு ஆடி மீ 10 உ புதன் கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:- முதல் வட்டி ரூபாய் 6900/-ம் 13-12-63 தொடக்கம் 4-10-65 வரைக்கும் ரூபாய் 4000/-க்கு 15 வீத வட்டியும் அதன் பின் முழுத் தொகைக்கும் இறக்கும் வரை 5 வித வட்டியும் குறிக்கப்பட்ட கோட்டுச் செலவு ரூபாய் 175/- கொடுபட்டுள்ளது.

ஆதனங்களின் விபரம்

1, வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி அல்லப்பிட்டிக் கோயிற்பற்று மண்டைதீவு இறை "முன்திடாப்பிராயும் பெரியடாம்பிராயும் இடப்பிராயும்" கில. பர. 9 குழி 5¼-ம் பனைகளும் தென்னைகளும் மற்றும் செய்பயிர் வான்பயிர்களும் வீடும் தலவாசலும் குசினியும் கிணறும் எல்லை கிழக்கு கந்தையா பெண் சின்னம்மாவுக்கும் பங்காளருக்கும் குழந்தைவேலு இரத்தினசிங்கத்துக்கும் பெண் கனகமணிக்குமுரிய ஆதனங்கள், வடக்கு நடராசா பெண் நாகலெட்சுமிக்குரிய ஆதனமும் ஒழுங்கை முகப்பும், மேற்கு மருதடியார் பெண் சிவக்கொழுந்துவுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனங்கள் தெற்கு விநாயகமூர்த்தி திருநாவுக்கரசுவினுடையது

2 ஷை இறை "சங்குட்டி" கில. பர. 4 3/8-ம் கிணறும் எல்லை கிழக்கு செல்லத்தம்பி ஏரம்புவுக்கும் விநாயகமூர்த்தி திருநாவுக்கரசுவுக்கும் சிறீகாந்தராசா பெண் பராசக்திக்குமுரிய ஆதனங்கள். வடக்கு பசுபதிச் செட்டியார் பெண் நாகலெட்சுமிக்கும் கதிரவேலு நடராசாவுக்குமுரிய ஆதனங்கள் மேற்கு கார்த்திகேசு முத்துக்குமாருவினுடையது. தெற்கு சோமசுந்தரம் பெண் இராசலெட்சுமிக்கும் செல்லத்தம்பி ஏரம்புவுக்குமுரிய ஆதனங்கள். இதில் இந்த எல்லைகளின்படி சொரியலாய் கில. பர. 2 3/8, இது 12/35 பங்கு. பதிவு இல C 327/28

3. ஷை இறை "குப்பைத்திடல் காரைத்தாழ்வு குளக்கட்டுக்கடவை" கில பர 4 ம் கிணறும் பனைகளும் எல்லை கிழக்கு இராயப்பு பெண் கத்திரினைப்பிள்ளைக்கும் மறுபேருக்குமுரிய ஆதனங்கள், வடக்கு சேதுராசா பெண் பூமணியினுடையது, மேற்கு சின்னையா நல்லையவுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனங்கள். தெற்கு சின்னையா நல்லையவுக்கும் செல்லத்தம்பி கந்தையாவுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனங்கள் இதில் சொரியலாய் 9/10 பங்கு. பதிவு இல. C. 219/163

22, கோவில் வீதி, — நீ. அன்ரனிப்பிள்ளை,
யாழ்ப்பாணம். — கொம்மிஷனரும் விலைமதிப்பாளரும்
எம் 64 7-6-68

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள சைவப்பிரகாச யந்திரசாலையில், 2 ம் நம் இரண்டாமொழுங்கை பிறவுன் வீதியில் வசிக்கும் திரு. மு மயில்வாகனம் அவர்களால் 7—6—1968 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.
பத்திராதிபர்: திரு மு. மயில்வாகனம் அவர்கள்.

இராசையா வைத்தியசாலை

பிரபல பண்டிதர் க. மூத்துக்குமாரு அவர்களின் மாணவரும் அகில இலங்கை சித்த ஆயுள்வேத வைத்தியசங்கக் காரியதரிசியுமான யாழ்ப்பாணம், நாவலர் வீதி, வைத்தியபூபதி, திரு. ஏ சி. இராசையா அவர்களின வைத்தியசாலை அன்னாரின் மாணுக்கரும, மருமகருமால் தொடர்ந்து நடாத்தப்படுகிறது
(M 67 7 14 & 21)

# கோட்டு விற்பனவு விளம்பரம்

முருகேசு கந்தப்பசேகரப்பிள்ளை ஏழாலை — வழக்காளி
எதிராக
இல. M B 7074.
1. சின்னத்தம்பி பொன்னையாவும் மனைவி
2. நாகரத்தினம்
3. சுப்பையர் இராசையாவின மகள் அமிர்த வல்லிஅம்மா கொக்குவில் கிழக்கு
—எதிரிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 7074 -ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளையின்படி பின்னால் விபரிக்கப்படும் காணிகளை 1968-ம் ஞு ஆனி மீ 29-ம் உ சனிக் கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:— ரூபா 9970-04-ம் 26-11-64 தொடக்கம் 17-2-66 வரையில் ரூபா 8000/-க்கு 12 வீத வட்டியும் அதன்பின் பணம் முற்றாக இறுபடும் வரையில் முழுக்கூட்டுத் தொகைக்கு 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 393-55-ம் இத்தொகையில் 21-1-67-ல் ரூபா 4000/- வழக்காளிக்கு கொடுபட்டது.

ஆதனங்களின் அட்டவணை

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் நல்லூர் கோவிற்பற்று கொக்குவில் கிழக்கிறை "எருக்கலம்பிட்டியும்" எருக்கலம்பட்டையும் பர. நில. லாச்சம் 3 குழி 2½-யும் வீடும் பயிர்களும் இதற்கு எல்லை கிழக்கு ஞானலிங்கம் மனைவி அன்னபாக்கியத்தின் ஆதனம் வடக்கு கந்தையா முத்துத்தம்பியின் ஆதனம். மேற்கு கீழே கூறப்பட்ட இரண்டாம் காணி தெற்கு கிணற்றடிக்கு போகும் கை ஒழுங்கை. இந்த எல்லைகளுக்குட்பட இதடங்கலும், மேற்கெல்லைக்காணியில் மேற்கெல்லையிலிருக்கும் கிணற்றில் தண்ணீர்ப்பங்கும் தெற்கெல்லைக்கருகாமையில் போகும் கை ஒழுங்கையிலிருக்கும் வழி வாய்க்கால் பாவிப்புரித்தும் தெற்கே உள்ள ரோட்டுக்குப் போகும் இக் கை ஒழுங்கையால் போக்குவரவு செய்யும் உரித்தும்

2, ஷை இறை எருக்கலம் பிட்டியும் எருக்கலம் பட்டையும் பர. நில லாச்சம் 3 குழி 2½-யும் வீடும் பயிர்களும் இதற்கெல்லை கிழக்கு மேலே சொல்லப்பட்ட முதலாம் காணி, வடக்கு கந்தையா முத்துத்தம்பியின் ஆதனம், மேற்கு சிதம்பு கைம்பெண் ஞானபூரணத்தினதும் அவரின் பிள்ளைகளுடைய ஆதனம், தெற்கு கை ஒழுங்கை இந்த எல்லைக்குட்பட அடங்கலும் தெற்கிலுள்ள ரோட்டுக்கு இக் கை ஒழுங்கையால் போக்குவரவு செய்ய உரித்தும், ஆனால் இணறிலிருந்து மறு காணிகளுக்குரிய வாய்க்கால் வழி தண்ணீர் டங்கு புறநீங்கலாக.

க செல்வத்துரை
ஏல விற்பனையாளரும் விலைமதிப்பாளரும்
"முருகன் இல்லம்"
இணுவில், 13.5.68
M 68 7-6-68